| எண் | தமிழ் எழுத்தாளர்களின் பெயர்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | எழுத்தாளர் தேவதேவன் | 5 - 7 |
| 2 | எழுத்தாளர் நாஞ்சில் நாடன் | 7 - 10 |
| 3 | எழுத்தாளர் பிரபஞ்சன் | 10 -12 |
| 4 | எழுத்தாளர் ஜோ டி குருஸ் | 13 – 15 |
| 5 | எழுத்தாளர் ஜெயமோகன் | 15 – 21 |
| 6 | எழுத்தாளர் பூமணி | 21 – 23 |
| 7 | எழுத்தாளர் தாமரைக்கண்ணன் | 23 – 26 |
| 8 | எழுத்தாளர் தி. ஜானகிராமன் | 27 – 31 |
| 9 | எழுத்தாளர் கி. ராஜநாராயணன் | 31 – 33 |
| 10 | எழுத்தாளர் சா. கந்தசாமி | 33 – 36 |
| 11 | எழுத்தாளர் சாரு நிவேதிதா | 36 – 38 |
| 12 | எழுத்தாளர் சிவசங்கரி | 38 – 41 |
| 13 | எழுத்தாளர் சுந்தர ராமசாமி | 41 – 45 |
| 14 | எழுத்தாளர் சுபா | 45 – 46 |
| 15 | எழுத்தாளர் சுஜாதா | 46 – 49 |
| 16 | எழுத்தாளர் தமிழ்மகன் | 49 – 53 |
| 17 | எழுத்தாளர் கவிஞர் தாமரை | 53 – 55 |
| 18 | எழுத்தாளர் கழனியூரன் | 55 – 57 |

| | | |
|---|---|---|
| 19 | எழுத்தாளர் கல்கி | 57 – 61 |
| 20 | எழுத்தாளர் க. பூரணச்சந்திரன் | 61 – 64 |
| 21 | எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் | 64 – 68 |
| 22 | எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி | 68 – 71 |
| 23 | எழுத்தாளர் ஆதவன் | 71 -72 |
| 24 | எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்சினி | 72 - 74 |
| 25 | எழுத்தாளர் அரவிந்தன் நீலகண்டன் | 74 - 76 |
| 26 | எழுத்தாளர் அம்பை | 76 - 78 |
| 27 | எழுத்தாளர் அசோகமித்திரன் | 78 - 80 |
| 28 | எழுத்தாளர் அ. முத்துலிங்கம் | 81 - 83 |
| 29 | எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் | 83 - 85 |
| 30 | எழுத்தாளர் தி.பரமேசுவரி | 86 - 87 |
| 31 | எழுத்தாளர் லீனா மணிமேகலை | 87 - 88 |
| 32 | எழுத்தாளர் ரஜினி பெத்துராஜா | 88 - 89 |
| 33 | எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி | 89 -91 |
| 34 | எழுத்தாளர் ஜெயந்தி சங்கர் | 91 - 93 |
| 35 | எழுத்தாளர் மதுமிதா | 93 - 95 |
| 36 | எழுத்தாளர் சே. கல்பனா | 95 - 96 |
| 37 | எழுத்தாளர் தாட்சாயணி | 96 - 97 |
| 38 | எழுத்தாளர் சித்தி ஜுனைதா பேகம் | 98 - 99 |

| | | |
|---|---|---|
| 39 | எழுத்தாளர் பாமா | 100 - 101 |
| 40 | எழுத்தாளர் வேதா.இலங்காதிலகம் | 101 - 103 |
| 41 | நளாயினி தாமரைச்செல்வன் | 103 - 104 |
| 42 | எழுத்தாளர் லட்சுமி | 104 - 106 |
| 43 | எழுத்தாளர் ராஜேஷ் குமார் | 107 - 109 |
| 44 | எழுத்தாளர் பாவண்ணன் | 109 - 111 |
| 45 | எழுத்தாளர் ரா. கி. ரங்கராஜன் | 112 - 114 |
| 46 | எழுத்தாளர் செந்தலை ந. கவுதமன் | 114 - 115 |
| 47 | எழுத்தாளர் ரமணி சந்திரன் | 116 - 117 |
| 48 | எழுத்தாளர் சல்மா | 118 - 120 |
| 49 | எழுத்தாளர் சந்திரா இரவீந்திரன் | 120 - 122 |
| 50 | எழுத்தாளர் சந்திரவதனா | 122 - 124 |
| 51 | எழுத்தாளர் பாலகுமாரன் | 124 - 126 |
| 52 | எழுத்தாளர் குட்டி ரேவதி | 126 - 128 |
| 53 | எழுத்தாளர் கிருத்திகா | 129 - 131 |
| 54 | எழுத்தாளர் உமா மகேஸ்வரி | 131 - 133 |
| 55 | எழுத்தாளர் பகீரதி | 133 - 135 |
| 56 | எழுத்தாளர் பெருஞ்சித்திரனார் | 135 - 138 |
| 57 | எழுத்தாளர் ஜெயகாந்தன் | 138 - 139 |
| 58 | எழுத்தாளர் அகிலன் | 140 - 145 |

| | | |
|---|---|---|
| 59 | எழுத்தாளர் சி.எஸ்.செல்லப்பா | 145 - 146 |
| 60 | எழுத்தாளர் தொ. மு. சிதம்பர ரகுநாதன் | 147 - 148 |
| 61 | எழுத்தாளர் வண்ணதாசன் | 149 - 150 |
| 62 | எழுத்தாளர் மீ. ப. சோமசுந்தரம் | 150 - 152 |
| 63 | எழுத்தாளர் சுரதா | 152 - 154 |
| 64 | எழுத்தாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் | 155 - 156 |

## 1. எழுத்தாளர் தேவதேவன்

**பிறப்பு :** மே 5, 1948

**பிறந்த ஊர் :** இராஜகோவில், விருதுநகர் மாவட்டம்

தேவதேவன் என்ற புனைப்பெயரால் அறியப்பட்ட பிச்சுமணி கைவல்யம் ஒரு நவீனத் தமிழ் கவிஞர் ஆவார். பிச்சுமணி கைவல்யம் என்ற பெயரில் கதைகளையும் எழுதி வருகின்றார். இவர் எழுதிய தேவதேவன் கவிதைகள் எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

**வாழ்க்கைச் சுருக்கம் :**

கைவல்யம் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இராஜகோவில் என்ற ஊரில் மே 5, 1948 ஆம் ஆண்டு பிச்சுமணி தம்பதியினருக்குப் பிறந்தார். ஈ.வெ.ராமசாமி இவருக்குக் கைவல்யம் என்ற பெயரை இட்டார். தந்தையுடன் 19 அகவையில் தூத்துக்குடிக்கு பிழைப்புத் தேடி வந்த கைவல்யம் இன்றளவும் அங்கேயே தங்கியிருக்கிறார். பள்ளிப்படிப்பை முடித்தபின் கைவல்யம் ஒரு சிறு அச்சகம் ஒன்றை நடத்தி வந்தார். பின்னர் ஆசிரியர் படிப்பு முடித்து தூத்துக்குடியிலேயே ஆசிரியரானார். நகராட்சிப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றினார். 2002 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுப் பெற்றார். இவரது மனைவி சாந்தி, மகள் அமர்த்தா பிரீதம், மகன் அரவிந்தன் ஆவர்.

**எழுத்துலகம் :**

இளம்வயதில் மரபுக்கவிதைகள் எழுதிவந்த கைவல்யம் தோரோ, எமர்சன் ஆகியோரின் படைப்புகளால் கவரப்பட்டு நவீனக் கவிதைகளைப் புனையத் தொடங்கினார். குறுகிய காலம் கேரளத்தில் வாழ்ந்தபோது அங்கிருந்த இயற்கைக் காட்சிகளினால் ஆழமான மனநகர்வுக்கு உள்ளாகி நிறைய கவிதைகள் எழுதினார். இக்கால கட்டத்தில் அவர் சுந்தர ராமசாமி தன் வீட்டு மாடியில் நடத்திவந்த காகங்கள் என்ற இலக்கிய உரையாடல் அமைப்பில் நெடுந்தொலைவுப் பயணம் செய்து வந்து கலந்து கொண்டார். கைவல்யத்தின் முதல்கவிதைத் தொகுப்பு குளித்துக் கரையேறாத கோபியர்கள் 1982 ஆம் ஆண்டு வெளிவந்தது. இரண்டாவது தொகுப்பு மின்னற்பொழுதே தூரம் பிரமிள் முன்னுரையுடன் வெளிவந்து கவிதை வாசகர்களால் கவனிக்கப்பட்டது. தொடர்ந்து மாற்றப்படாத வீடு பிரமிள் முன்னுரையுடன் வெளிவந்தது. பெரும்பாலான கவிதைகளை தன் நண்பர்களான முத்துப்பாண்டி, லெனா குமார், காஞ்சனை சீனிவாசன் ஆகியோரின் உதவியுடன் அவரே வெளியிட்டு வந்தார். பின்னர் அவரது கவிதைகளைத் தமிழினி பதிப்பகம் வெளியிட தொடங்கியது. 2005 ஆம் ஆண்டு அவரது கவிதைகளுக்கான முழுத்தொகுப்பு தேவதேவன் கவிதைகள் என்ற பெயருடன் தமிழினி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. தேவதேவன் கவிதைபற்றி என்ற உரையாடல் நூலையும் அலிபாபவும் மோர்ஜியானாவும் என்ற நாடக நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

**விருதுகளும் திறனாய்வுகளும் :**

- திருப்பூர் தமிழ்ச்சங்க விருது
- லில்லி தேவசிகாமணி விருது

- தேவமகள் அறக்கட்டளை விருது
- தமிழக அரசின் தமிழ்வளர்ச்சிக்கழக விருது
- விளக்கு விருது
- தூத்துக்குடி சாராள்-ராஜபாண்டியன் வாழ்நாள் இலக்கிய சாதனை விருது

**கவிதை நடை :**

தேவதேவன் கவிதைகள் எளிய மொழிநடையைக் கொண்டவை. இயற்கைசார்ந்த படிமங்களை உள்ளடக்கிய தத்துவ நோக்குடன் சொல்பவை. அவரது சிறந்த கவிதைகளில் மென்மையான இசை ஒழுங்கு காணப்படும். நவீன வாழ்க்கையின் அழகின்மையையும் இலக்கின்மையையும் விமர்சிக்கும் தேவதேவன் இயற்கையின் பேரழகையும் அதன் சாரமான கருணையையும் மீண்டும் மீண்டும் முன்வைக்கிறார்.

## 2. எழுத்தாளர் நாஞ்சில் நாடன்

**பிறப்பு :** டிசம்பர் 31, 1947

**இயற்பெயர் :** க. சுப்பிரமணியம்

வீர நாராயண மங்கலம் கன்னியாகுமரி மாவட்டம் நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியப் படைப்பாளர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் க. சுப்பிரமணியம். இவரது புனைப்பெயர் நாஞ்சில் நாடன். துணைவியார் பெயர் சந்தியா சுப்பிரமணியம். வேலையின் காரணமாகப் பல ஆண்டுகள் மும்பையில் வாழ்ந்தார். தற்போது கோயம்புத்தூரில் வாழ்ந்து வருகிறார். நாஞ்சில்நாடன்

நகைச்சுவையும் சமூகவிமர்சனமும் இழையோடும் படைப்புகளுக்காக புகழ்பெற்றவர். தமிழ் மரபு இலக்கியத்தில் உள்ள தேர்ச்சி இவரது படைப்புகளில் வெளிப்படும். கம்பராமாயணத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். தெய்வங்கள், ஓநாய்கள், ஆடுகள் என்ற சிறுகதைத்தொகுதி மூலம் புகழ்பெற்றார். தலைகீழ்விகிதங்கள் இவரது முதல் நாவல். இவரின் மிக முக்கியமான அடையாளம் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கிலான எழுத்துநடை. தலைகீழ் விகிதங்கள் நாவலை இயக்குநர் தங்கர்பச்சன், சொல்ல மறந்த கதை என்ற பெயரில் திரைப்படமாக்கி இருக்கிறார்.

**பெருமைகளும் விருதுகளும் :**

- 2010 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது இவரது சூடிய பூ சூடற்க என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டது.

- கனடாவின் இலக்கியத்தோட்டத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான இயல்விருது தொராண்டோவில் இவருக்கு அளிக்கப்பட்டது.

**படைப்புகள் :**

- தலைகீழ் விகிதங்கள்
- என்பிலதனை வெயில்காயும்
- மாமிசப்படைப்பு
- மிதவை
- சதுரங்க குதிரை
- எட்டுத் திக்கும் மதயானை

**சிறுகதை தொகுதிகள் :**

- தெய்வங்கள் ஆடுகள் ஓநாய்கள்
- வாக்குப்பொறுக்கிகள்
- உப்பு
- பேய்க்கொட்டு
- பிராந்து
- நாஞ்சில் நாடன் கதைகள்
- சூடிய பூ சூடற்க
- முத்துக்கள் பத்து
- கான் சாகிப்
- கொங்குதேர் வாழ்க்கை

**கவிதை :**

- மண்ணுள்ளிப் பாம்பு
- பச்சை நாயகி
- வழுக்குப்பாறை
- புளிக்கும் ஆப்பழம்

**கட்டுரைகள் :**

- நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் வாழ்க்கை
- நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று

- நதியின்பிழையன்று நறும்புனல் இன்மை
- தீதும் நன்றும்
- திகம்பரம்
- காவலன் காவான் எனின்
- அம்பறாத்தூணி
- அகம் சுருக்கேல்
- எப்படிப் பாடுவேனோ?
- கைம்மண் அளவு

## 3. எழுத்தாளர் பிரபஞ்சன்

**பிறப்பு :** ஏப்ரல் 27, 1945

**இயற்பெயர் :** சாரங்கபாணி வைத்தியலிங்கம்

**இறப்பு :** டிசம்பர் 21, 2018

**வாழ்க்கைக் குறிப்பு :**

பிரபஞ்சன் பிறந்த ஊர் புதுச்சேரி. இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். இவரது தந்தை ஒரு கள்ளுக்கடை வைத்திருந்தார். புதுச்சேரியில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கரந்தை கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றார். தஞ்சாவூரில் ஆசிரியராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். குமுதம் ஆனந்த விகடன் மற்றும் குங்குமம் ஆகிய வார இதழ்களில் பணிபுரிந்து உள்ளார். 1961ல், இவரது முதல் சிறுகதை என்ன உலகமடா பரணி என்ற இதழில் வெளியானது. இவர் சுயமரியாதை

இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இதுவரை 46 புத்தகங்களுக்கும் கூடுதலாக எழுதியுள்ளார்.

1995ல் இவரது வரலாற்றுப் புதினம் வானம் வசப்படும் தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றது. இப்புதினம் ஆனந்தரங்கம் பிள்ளையின் காலத்தைக் களமாகக் கொண்டுள்ளது. இவரது படைப்புகள் இந்தி, தெலுங்கு, கன்னடம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் சுவீடிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான முட்டை தில்லிப் பல்கலைக்கழக பாடத்திட்டத்திலுள்ளது. இவரது சிறுகதைத் தொகுப்பான நேற்று மனிதர்கள் பல கல்லூரிகளில் பாடப்புத்தகமாக உள்ளது. இவரது மனைவியின் பெயர் பிரமிளா ராணி. மூன்று மகன்கள் உள்ளனர். இவர் சென்னையிலும் புதுச்சேரியிலும் வசித்து வந்தார்.

**விருதுகள் :**

- சாகித்ய அகாதமி விருது
- பாரதிய பாஷா பரிஷத் விருது
- கோயம்புத்தூர் கஸ்தூரி ரங்கம்மாள் விருது
- இலக்கியச் சிந்தனை விருது
- சி. பா. ஆதித்தனார் விருது
- தமிழக அரசின் பரிசு
- தமிழக சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான பரிசு

**புதினங்கள் :**

- வானம் வசப்படும்
- மகாநதி
- மானுடம் வெல்லும்
- சந்தியா
- காகித மனிதர்கள்
- கண்ணீரால் காப்போம்
- பெண்மை வெல்க
- பதவி
- ஏரோடு தமிழர் உயிரோடு
- அப்பாவின் வேஷ்டி
- முதல் மழை துளி

**சிறுகதைத் தொகுப்புகள் :**

- நேற்று மனிதர்கள்
- விட்டு விடுதலையாகி
- இருட்டு வாசல்
- ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்